(1) ச.வெ. எண்: 05 நாள்: 03-06-2019

பத்திரிக்கை செய்தி

மாவட்ட குடும்ப நல செயலகம், உதகை நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்ட குடும்ப நல செயலகத்தில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு பழங்குடியினர் ST/Tribal பிரிவினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இவ்ஓட்டுநர் பணிக்கு அரசினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் ஓட்டுநர் உரிமம், இரண்டு வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம், எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மேலும் வாகன பராமரிப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் தெரிந்திருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கு காலமுறை ஊதியம் 19500-62000 ஆகும். 31.5.19 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். இம்மாவட்ட வேலைவாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் முதுநிலை பெயர் பட்டியல் மூலமாகவும் நாளேடு விளம்பரம் முலமாகவும் இப்பணியிடத்திற்கு பணியாளர் தேர்வு செய்யபடுவார்கள்.

எனவே, இப்பதவிக்கு தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் சான்றிதழ் நகல் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பக பதிவு அட்டையின் நகலுடன் கீழ்கண்ட முகவரிக்கு 19.06.2019 மாலை 5.00 மணிக்குள் வந்தடையுமாறு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதற்குபின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்க இயலாது. நியமன அதிகாரியின் முடிவே இறுதியானது.

(ஒம்) J.இன்னசென்ட் திவ்யா
மாவட்ட ஆட்சியர்
நீலகிரி மாவட்டம்.

உண்மை நகல் அனுப்பப்படுகிறது

3/6/19

துணை இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
மற்றும் குடும்ப நலம் , நீலகிரி மாவட்டம்.